(முழுப் பதிப்புரிமையுடையது)



# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

# இலங்கை நிர்வாக சேவை அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2013(1)

## சமூக பொருளாதாரக் கொள்கைகள் (08)

**3 மணித்தியாலங்கள்**

**ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.**

---

01.
I. ஒரு அரசாங்கம், தனது பொருளாதாரத்தில் தலையிடுவதன் (Intervention) மூலம் எதிர்பார்க்கும் முக்கிய குறிக்கோள்களை விளக்குக.

II. ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் தலையீடு செய்வதற்காக அரசாங்கம் பயன்படுத்தும் முக்கியமான பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள் (macroeconomic policies) எவை?

III. அரசாங்கம் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான செலவுகளை அதிகரித்தது எனக் கொள்க. ஏனைய அனைத்துக் காரணிகளும் மாற்றமடையாதவிடத்து, அதன் மூலம் தேசிய வருமானச் சமநிலையிலும் (National equilibrium income) சந்தை வட்டி வீதங்களிலும் ஏற்படக் கூடிய தாக்கங்களை விளக்குக.

02.
I. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி (Economic growth) என்பதன் மூலம் கருதப்படுவது யாது?

II. பொருளாதார வளர்ச்சியை (Economic growth) பொருளாதார அபிவிருத்தியில் (Economic development) இருந்து எவ்வாறு வேறுபடுத்திக் காட்ட முடியும்?

III. இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் முக்கியமான குறிகாட்டிகள் எவை?

IV. 'இலங்கை 40 நாடுகளின் மனிதவள அபிவிருத்தியை விஞ்சிய உயர்ந்த மனித வள அபிவிருத்தியைக் கொண்டுள்ள நாடுகள் என்ற வகையில் நுழைந்துள்ளது" – 2013 மார்ச் 3 ஆந் திகதி வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (UNDP) அறிக்கை – விளக்குக.

03.
I. 2009 ஆம் ஆண்டு வரை முப்பது 30 வருடங்களுக்கு மேல் நீடித்த கொடிய யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக சமாதானத்தை பேணி வருவதன் முக்கியத்துவத்தை விளக்குக.

II. நாட்டினுள் நீடித்து நிலைக்கக் கூடிய சமாதானத்தைப் பேணுவதில் இலங்கை எத்தகைய சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடலாம்?

III. அத்தகைய சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்குப் பயன்படுத்த முடியுமான மிகவும் பயனுறுதிமிக்க உபாய முறைகள் எவை?

IV. இலங்கையில் சமாதான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக உபாயமுறை சர்வதேச ஒத்துழைப்புக்களை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை நீங்கள் எவ்வாறு விளங்கிக்கொள்கின்றீர்?

04. I சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட சமூக நலன்புரிக் கொள்கைளை (Social welfare polices) சுருக்கமாக விளக்குக.

II. இலங்கை உயர் சமூக பொருளாதார அபிவிருத்தியினை அடைவதில் மேற்குறித்த கொள்கைகள் எந்தளவுக்கு தாக்கம் செலுத்தின?

III. இலங்கை போன்ற சிறிய பொருளாதாரம் ஒன்றிற்கு இத்தகைய நலன்புரிக் கொள்கைளை நடைமுறைப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய பாதகங்களை விளக்குக.

05. I மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இலங்கையின் தற்போதைய அபிவிருத்தித் திட்டங்கள் “ஆசியாவில் எழுச்சிபெற்று வரும் அதிசயம்” என்பதன் மூலம் கருதப்படு யாது?

II. அத்தகைய எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடையப்பெறுவதில் தற்போதைய பொருளாதாரக் கொள்கைகள் எந்தளவுக்குப் பங்களிப்புச் செய்யும்?

III. மஹித்த சிந்தனை எதிர்காலநோக்கின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதில் இலங்கை எதிர்நோக்கும் முக்கியமான சவால்கள் எவை?

06. I. வறுமையின் பல்பரிமாணத் தன்மை (Multi–dimensional nature of poverty) என்பதன் மூலம் கருதப்படுவது யாது?

II. இலங்கையின் தற்போதைய வறுமைநிலையின் பிரதான பண்புகளை விளக்கி அதன் முக்கிய போக்குகளை அடையாளப்படுத்துக.

III. திவிநெகும தேசிய நிகழ்ச்சித் திட்டமானது, எந்தவளவுக்கு இலங்கையின் வறுமையின் பல்பரிமாணத் தன்மைக்கு (Multi –dimensional nature of poverty) தீர்வு காணும் என்பதை விமர்சனக் கண்ணோட்டத்துடன் ஆராய்க.

07. “உலகின் மிகக் கொடூரமான பயங்கரவாத அமைப்பை அழித்தொழித்த சிறிய நாடான இலங்கை விடயத்தில் மேற்குலகம் உரிய அங்கீகாரம் வழங்கவில்லை என்பது கசப்பான உண்மையாகும். தனது சமூக பொருளாதார அபிவிருத்தியை அடையப்பெறுவதில் சில மேற்கு நாடுகளால் ஏற்படுத்தப்படும் சவால்களுக்கு இலங்கை முகங்கொடுக்க வேண்டியுள்ளது.” விமர்சனக் கண்ணோட்டத்துடன் ஆராய்க.

***************